**விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழும் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய நீண்டகாலக் கடனின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த கம்பனியில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,708,333 தொகையான கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக தீர்க்கப்படாது காணப்பட்டது.

(ஆ) குறுங்காலக் கடனின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த 7 ஆண்டுகளுக்கு மேலான கடன் மீதி ரூபா 114,810,370 தொகையாகக் காணப்பட்டதுடன் அக் கடனை மீள அறவிடப்படுவதற்கான ஆக்கபூர்வமான நடைமுறைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) முற்பணங்களின் கீழ் காண்பிக்கப்படும் ரூபா 16,428,742 தொகையான 04 மீதிகள் 05 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக தீர்க்கப்படாதிருந்தது.

(ஈ) 03 ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிதிக்கூற்றுக்களில் தீர்க்கப்படாது முன்கொண்டுவரப்படும் ரூபா 787,408 தொகையான 03 பொறுப்பு மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் மீதி அவற்றின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இல்லாத காரணத்தினால் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்படுவதற்கு முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நடைமுறைச் சொத்துக்கள் | | |
| | • சேமிப்பு வங்கிக் கணக்குகள் | 7,241,656 | வங்கி மீதியினை உறுதிப்படுத்தப் படுவதற்காக வங்கிக் கணக்கு இலக்கமும் அது தொடர்பான ஆவணங்களும் |
| (ஆ) | பெறவேண்டிய குறுங்காலக் கடன் | | |
| | (i) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு - விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 7,923,175 | கடன் மீதிப் பட்டியல் |
| | (ii) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு - சுழற்சி நிதியம் | 44,255,850 | கடன் மீதிப் பட்டியல் |
| (இ) | பெறவேண்டிய நீண்டகாலக் கடன் | | |
| | விவசாய வங்கிக் கடன் - கமநல சேவைகள் குழுக் கணக்கு | 9,112,579 | கடன் மீதிப் பட்டியல் |
| (ஈ) | நடைமுறையற்ற பொறுப்புகள் விவசாயிகளின் வைப்புகள் | 697,644 | பொறுப்புகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 217,817,432 தொகையான மிகை ஏற்பட்டிருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 167,551,648 ஆகக் காணப்பட்டமையால் நிதிவிளைவுகளில் ரூபா 50,265,784 தொகையான தேறிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 67,557,239 ஆலும் அபிவிருத்திச் செலவினம் ரூபா 17,162,412 ஆலும் அதிகரித்திருந்தமை நிதிவிளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்

#### 3.1.1 முற்பணம் தீர்க்கப்படுவதிலான தாமதங்கள்

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக முற்பணம் வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலான காலம் கடந்திருந்த போதிலும் மேலும் தீர்க்கப்படாதுள்ள முற்பண மீதி அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| நிறுவகம் / செயற்பாடு | வழங்கப்பட்ட ஆண்டு | வழங்கப்பட்ட தொகை | 2012.12.31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதுள்ள மீதி |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| வடக்கின் வசந்தம் விசேட நிகழ்ச்சித்திட்டம் | 2010 | 7,361,259 | 3,967,908 |
| கிழக்கின் உதயம் விசேட நிகழ்ச்சித்திட்டம் | 2011 | 1,733,461 | 5,665 |
| சிறிய நீர்ப்பாசன புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 2011 | 30,664,381 | 18,201,252 |
| ஊவா மாகாண சபை – சோளக் கொள்வனவு | 2010 | 1,916,623 | 1,833,887 |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல் ஆளுகையும்

### 4.1 ஆண்டறிக்கையினை சபையில் முன்வைத்தல்

திறைசேரி பிரதிச் செயலாளரின் 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/ 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

- கடன் வழங்கல் மற்றும் கடன் அறவீடு
- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்

(இ) நிதியப் பயன்பாடு

(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு